**சென்னை – 600006, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**ந.க.எண் 449/C7/SS/SMC/2021-22, நாள் 16.03.2022**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2021-2022 ஆம் கல்வியாண்டில் – பள்ளி மேலாண்மைக்குழு - பெற்றோர்கள் கூட்டம் - Mentors and Masters Trainers ( State Resource Persons) கலந்து கொள்ளுதல் – சார்பு.

**பார்வை:** 1. அரசாணை நிலை எண்.42, பள்ளிக் கல்வித்துறை (SSA1), நாள். 06.03.2019.

2. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண் 449/C7/SS/SMC/2021-22, நாள் 02.03.2022

*****

பார்வை-1ல் உள்ள அராசணையின்படி, பள்ளி மேலாண்மைக் குழுவினை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மறுகட்டமைப்பு செய்வது அவசியமாகும். அதன்படி, அனைத்து பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழுவினை மறுசீரமைப்பு செய்வதற்குத் தேவையான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடிமைச் சமூக அமைப்பு சார்ந்த முதன்மைக் கருத்தாளர்களுக்கு (Mentors) மாநில அளவில் பயிற்சிகள் நடத்தப்பட்டது.

மாவட்ட அளவில் விருப்பம் தெரிவித்த கருத்தாளர்களாகிய ஆசிரியர்களுக்கு (SMC Resource Personss) பிப்ரவரி 15.02.2022 மற்றும் 16.02.2022 ஆகிய தேதிகளில் உண்டு உறைவிடப் பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் கருத்தாளர்களாகிய ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் 15 பள்ளிகள் வீதம் ஒதுக்கீடு (Mapping) செய்யப்பட்டு, ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 5 உறுப்பினர்கள் வீதம் (District Resource Person) (HM-1, Teacher-1, Local Bodies Elected Member-2, SHG Member / Educationist / Philanthropist-1) பயிற்சிகள் வழங்கப்பட்டது.

பார்வை-2ல் உள்ள செயல்முறைகளின்படி மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு **20.03.2022 (ஞாயிற்றுக்கிழமை)** அன்று

காலை 10.00 மணி முதல் 1 மணி வரை பெற்றோர்கள் கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் , பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவம்,

பெற்றோர்களின் கடமை மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பு குறித்து விழிப்புணர்வு வழங்க வேண்டும். கூட்டத்தில் பெற்றோர்கள் கலந்து கொள்வதற்கான அவசியம் குறித்து இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து அரசுப்பள்ளி தலைமை அசிரியர்களை அவரவர் பள்ளியின் பெற்றோர்களின் வருகையை உறுதி செய்ய அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**Mentors and Masters Trainers ( State Resource Persons)**

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த Mentors and Masters Trainers (State Resource Persons) பள்ளிகளில் நடைபெறும் பெற்றோர்கள் கூட்டத்திற்கு தங்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருந்து இக்கூட்டத்தை சிறப்பாக நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த , பெற்றோர்கள் கூட்டத்தை நடத்தி, புகைப்படத்துடன் கூடிய தொகுப்பறிக்கையை **SSTNSMC Whats App** செயலியில் அனுப்பிட அந்தந்த மாவட்ட SMC DC - ஐ அறிவுறுத்திட அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

16/3/22
Consultant

**மாநில திட்ட இயக்குநர்**
16/3/22